**கவனிக்க.**- 2007.08.31 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1514 - 2007 සැප්තැම්බර් 07 වැනි සිකුරාදා - 2007.09.07

1514 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 776 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 777 |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, செத்தெம்பர் 14 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, ஒகத்து 31 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1* விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

*1.2* சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

*1.3* சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1* நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

*2.2* அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

*2.3* அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1* நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :–

*3 : 1 : 1* சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

*3 : 1 : 2* சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

*3 : 1 : 3* சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

*3 : 1 : 4* அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

*3 : 1 : 5* அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

*3 : 1 : 6* இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

*3 : 1 : 7* அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

*3 : 1 : 8* தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1* நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

*4.2* நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

*4.3* அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

*4.4* ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1* ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1* எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

*6.2* விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

*6.3* விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

*6.4* விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

*6.5* விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1* தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன்அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள்-வெற்றிடம்

## தகைமை மற்றும் முதுநிலை அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் I ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்கல்

இல. 1086/26 மற்றும் 1999.07.02 ஆந் திகதிகொண்ட அதிவிசேட வர்த்தமான அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அதிபர் சேவையின் பிரமாணக் குறிப்பின் 23 தொடக்கம் 26 வரையான வாசகங்களின் ஒழுங்குவிதிகளுக்கமைய இலங்கை அதிபர் சேவையின் I ஆம் வகுப்பிற்கு தகைமை மற்றும் முதுநிலை அடிப்படையில் பதவி உயர்வு வழங்குவதற்காக கருத்திற்கொள்ள அதிபர் சேவையின் II ஆம் வகுப்பின் I ஆம் தர உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவம் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2. (அ) 2006.12.31 ஆந் திகதியன்று இலங்கை அதிபர் சேவையின் II ஆம் வகுப்பின் I ஆம் தரத்தில் 5 வருடத்திற்குக் குறையாத திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ள இலங்கை அதிபர் சேவையின் II ஆம் வகுப்பின் I ஆம் தர உத்தியோகத்தர்கள் தகைமை மற்றும் முதுநிலை அடிப்படையில் இச்சேவையின் I ஆம் வகுப்பிற்குப் பதவி உயர்வு வழங்குவதற்காக கருத்திற்கொள்ளக்கூடிய தகைமையைப் பெறுவர்.

**குறிப்பு**.- திருப்திகரமான சேவைக் காலத்திற்காக -

(ஆ) (i) 2006.12.31 ஆந் திகதியன்று அண்மித்த 5 ஆண்டுகளுக்குள் உரியவாறு தமது சகல சம்பள படி உயர்வுகளையும் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

(ii) முன்னைய 5 வருட காலத்திற்குள் (எச்சரிக்கை தவிர) ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கு உட்படாதிருத்தல் வேண்டும்.

3. பொ. நி. சு. 6/2006 இற்கமைய இலங்கை அதிபர் சேவையின் ரீஎஸ் - 3 - 2006 இற்கமைய ரூபா 15,350 - 5 x 210 - 5 x 300 - 8 x 350- 19,645 - ரூபா 32,955 சம்பள அளவில் I ஆம் வகுப்பின் சம்பளம் இப்பதவிக்கு உரித்தாகிறது.

**4. விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பப்படிவத்தின் 1-13 வரையான சகலதும் சரியாக விண்ணப்பதாரியினால் பூரணப்படுத்தப்பட வேண்டும். முழுமையான அல்லது அதில் ஏதாவதொரு விபரம் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2007.09.28 ஆகும். அன்றைய தினம் அல்லது அதற்கு முன்னர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆ) தங்களது விண்ணப்பம் இவ்வறிவித்தலில் இணைக்கப் பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய இருக்க வேண்டியதுடன் அதற்காக கடதாசியின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்த வேண்டும். 8 1/2" x 12" அளவுடைய கடதாசியை இதற்காகப் பயன்படுத்த வேண்டும். விண்ணப்பப்படிவம் விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

(இ) சகல முறைகளிலும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்திராத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் தபாலில் காணாமற் போதல் அல்லது தாமதித்துக் கிடைத்தல் சம்பந்தமான முறைப்பாடுகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை :

(அ) அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்களைக் கொண்ட நேர்முகப்பரீட்சைச் சபை மூலம் பொருத்தமானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

(ஆ) தெரிவுசெய்யும் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்ற அழைக்கப்படுவோரின் எண்ணிக்கை நிரப்பவேண்டிய வெற்றிட எண்ணிக்கையை விட இரட்டிப்பாக இருக்கும்.

தகைமை மற்றும் சிரேஷ்ட அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் I ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு நடைமுறைப்படுத்தப்படும் தினம் அரசசேவை ஆணைக்குழுவினாலேயே தீர்மானிக்கப்படும். ஏதாவது வெற்றிட எண்ணிக்கையை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்ப அல்லது நிரப்பாது இருக்க அரசசேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு. இதில் குறிப்பிடப்படாத வேறு ஏதாவது விடயங்கள் தொடர்பாக அரசசேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

அரசசேவை ஆணைக்குழுவின் பணிப்பின்படி,

ஆரியரத்ன ஹேவகே,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை,
2007, ஆவணி 16.

மாதிரி விண்ணப்பப்படிவம்

### தகைமை மற்றும் முதுநிலை அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் I ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்கல்

(வலயக் கல்வி அலுவலகங்களுக்குப் பொறுப்பான வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக கல்வி அமைச்சிற்குச் சமர்ப்பிப்பதற்காக.)

1. (i) முதலெழுத்துக்களுடன் இறுதியில் வரும் பெயர் :-----. (சம்பளப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு)

   (ii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் :-----.

2. (i) தற்பொழுது சேவையாற்றும் பாடசாலையும் முகவரியும் : -----.

   (ii) தற்பொழுது வகிக்கும் பதவி :-----.

   (iii) ஆசிரியராக முதல் நியமனத் திகதி :-----.

3. பிறந்த திகதி :-

   ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.

   2006.12.31 அந் திகதியன்று வயது :-

   வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

4. சேவையாற்றும் பாடசாலைக்குரிய -

(i) மாகாண கல்வித் திணைக்களம் :-----.

(ii) வலயக் கல்வி அலுவலகம் :-----.

5. (i) 1086/26 கொண்ட தற்போதைய இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைய II ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்கு நியமனம் பெற்ற/உள்ளீர்ப்புச் செய்த திகதி : -----.

(ii) மேற்கூறப்பட்ட (i) இல் 2006.12.31 இலுள்ளவாறு மொத்த சேவைக்காலம் :-----.

வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

6. கல்வித் தகைமை :-----.

7. தொழில் தகைமை :-----.

8. பங்கேற்ற பயிற்சிப் பாடநெறி தொடர்பான விபரம் :-----.

9. 2006.12.31 ஆந் திகதிக்கு மந்திய தொடர்ச்சியான 5 ஆண்டுகளுக்குள் பெற்ற எவ்வகையேனும் (எச்சரிக்கை தவிர்ந்த) தண்டனைகள் சுருக்கமாக :-----.

10. 2006.12.31 ஆந் திகதியன்று அண்மித்த தொடர்ச்சியான 5 ஆண்டுகளுக்குள் சம்பளம், படி உயர்வுகள் பெறப்பட்டுள்ளதா ? அவ்வாறின்றேல் அதற்கான காரணம் :-----.

11. கல்வித் துறையில் விசேட செயற்றிட்டம் ஒன்றை மேற்கொண்டிருப்பின் அது தொடர்பான விபரம் :-----.

12. தங்களுக்கு எதிராக தற்பொழுது ஏதாவதொரு ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்பட்டிருப்பின் அதன் தற்போதைய நிலைமை:-----.

13. 2006.12.31 ஆந் திகதிக்கு அண்மித்த 5 வருடங்களுக்குள் பெற்ற விடுமுறைகள் தொடர்பான விபரம் :-----.

| பெற்றுக்கொண்ட விடுமுறை எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|
| வருடம் | அமைய | சுகயீன | கடமை | சம்பளமற்ற |
| 2002 | | | | |
| 2003 | | | | |
| 2004 | | | | |
| 2005 | | | | |
| 2006 | | | | |

இலங்கை அதிபர் சேவையின் I ஆம் வகுப்பிற்கு தகைமை மற்றும் முதுநிலை அடிப்படையில் பதவி உயர்விற்காக கருத்திற்கொள்ள நான் தகைமை கொண்டவர் என்றும் இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மை என்றும் உறுதி கூறுகின்றேன்.

.........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

உத்தியோகத்தரினால் இவ் விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் அவரது சுயவிபரக் கோவை மற்றும் உரிய ஆவணங்களுடன் சரிபார்க்கப்பட்டு இவ் உத்தியோகத்தர் தகைமை மற்றும் முதுநிலை அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் I ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்கப்படுவதற்கு பொருத்தமானவர் என்று சான்றுரைக்கிறேன்.

..............................................
வலயக் கல்விப் பணிப்பாளர்/
(திணைக்களப் பொறுப்பாளரின்
கையொப்பம் பெயருடன் பதவி
முத்திரையைப் பொறிக்கவும்)

திகதி :-----.

9-181

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை நிருவாகச் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2007

இவ்வறிவித்தலின் "செயலாளர்" என்னும் பதம் அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எனப்பொருள்படும். "சேவை" என்ற பதம் இலங்கை நிருவாக சேவை எனப்பொருள்படும்.

1. **எழுத்துமுலப் பரீட்சை.**- பின்வரும் வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :-

(i) பொது விவேகம்
(ii) கட்டுரையும் சுருக்கமும்
(iii) பொது அறிவு
(iv) முகாமைத்துவ உளச்சார்பு

***பரீட்சைத் திகதி.***- இப்பரீட்சை 2007 திசெம்பர் மாதம் கொழும்பிலும் (நகர இல. 01) யாழ்ப்பாணத்திலும் (நகர இல. 02) நடாத்தப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளின் கீழ் இப்பரீட்சையை ஒத்திவைப்பதற்கவோ அல்லது இரத்துச் செய்வதற்கோ செயலாளருக்கு அதிகாரம் உண்டு. இதன் பிரகாரம் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் நகரத்தையும் நகர இலக்கத்தையும் சரியாக விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் குறிப்பிடவும். விண்ணப்பம் செய்கின்ற நகரம் தொடர்பில் பின்னராக மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

***நேர்முகப்பரீட்சை.***- எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத் தாள்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கிடையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளை பெறுகின்ற விண்ணப்பதாரிகள் தொடர்பில், நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதியை செயலாளர் தீர்மானிப்பார்.

2. நியமனம் செய்யப்படுவோரின் எண்ணிக்கையும் நியமனங்கள் நடைமுறைப்படும் திகதியும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி தீர்மானிக்கப்படும்.

3. சேவை நிபந்தனைகள்.- அரச சேவை நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட)2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்புக்கு மேற்கொள்ளப் பட்டுள்ளதும் வருங்காலங்களில் மேற் கொள்ளப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும், அமைய தெரிந் தெடுக்கப்படும் பரீட்சார்த்தி யொருவர் சேவையின் வகுப்பு III இற்கு நியமனம் செய்யப்படுவர்.

3.1 தனக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமையை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/ அல்லது நியமனம் செய்யப்பட்ட ஒரு பதவியை அல்லது நியமனம் செய்யப்பட்ட ஒரு பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்க மறுக்கின்ற அல்லது நழுவுகின்ற பரீட்சார்த்திகளின் நியமனங்கள் இரத்துச் செய்ய இடமுண்டு.

4. **அமைவும் வருடாந்த சம்பள அளவுத் திட்டமும்.:**

விசேட தரம் : ரூபா 42,390 - 12 x 1,310 - ரூபா 58,110
வகுப்பு I : ரூபா 36,755 - 17 x 1,050 - ரூபா 53,555
வகுப்பு II : ரூபா 30,175 - 8 x 790 - ரூபா 35,705
வகுப்பு III : ரூபா 22,935 - 10 x 645 - ரூபா 29,385

(நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலப்பகுதிக்குள் I ஆவது வினைத்திறன்காண் தடையும், நியமனத் திகதயிலிருந்து 6 வருட காலப்பகுதிக்குள் II ஆவது வினைத்திறன் காண் தடையும் உண்டு)

இப்பரீட்சை மூலம் இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புகள் செய்யப்படுகின்றது.

5. **உடல் நிலையும் ஒழுக்கமும்.**- பரீட்சார்த்தி நல் உடல் நிலையுடையவர் என்றும், நல்லொழுக்கமுடையவரென்றும் செயலாளர் திருப்தியடைதல் வேண்டும். அவர் நல்ல கண்பார்வை உடையவராகவும் இருக்க வேண்டுமென்பதுடன் இத்தீவில் எப்பகுதியிலேனும் சேவையாற்றத்தக்க உடல்நிலை உடையவராகவும் இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் மருத்துவப் பரிசோதனை ஒன்றுக்குத் தோற்ற வேண்டும்.

6. தகைமைகள்.-இதற்காக தோற்றுகின்ற பரீட்சார்த்தியொருவர் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

(அ) பல்கலைக்கழக பட்டமானது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னரான திகதியாக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு 30 வயதை அடையாதவராக இருத்தல் வேண்டும்.

(iv) நல்லொழுக்கத்துடனும் சிறந்த தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

(v) ஏதேனுமொரு சமயக் கிளையில் மதகுரு அந்தஸ்த்தில் உள்ள எந்தவொரு நபருக்கும் இப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

**குறிப்பு.**- (i) இரண்டு தடவைகளுக்கு மேலாக இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது.

(ii) இப் பரீடுசைக்காக விண்ணப்பம் செய்வதற்கு தேவைப்படும் தகைமைகள் 2007.10.05 ஆந் திகதியயில் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7. **பரீட்சைக் கட்டணம்,** - பரீட்சைக் கட்டணம் ரூபா 300 ஆகும். அவ்விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் எந்தவொரு மாவட்ட செயலகத்திற்கோ அல்லது பிரதேச செயலகத்திற்கோ வருமானத் தலைப்பு 4000-20-03-20-13 க்கு வரவு வைப்பதற்காக செலுத்த வேண்டும். மாவட்டச் செயலகத்திலிருந்து/ பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியை தம் வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

8. **விண்ணப்பிக்கும் முறை.**- (அ) விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவ உருவில் அமைய வேண்டும் என்பதுடன் அதை 8 1/2"x 12"(A4) அளவுடைய ஒரு தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு தயாரித்த விண்ணப்பத்தை பரீட்சார்த்தியின் கையெழுத்திலேயே பூர்த்தி செய்தல் வேண்டும். 1.0 தொடக்கம் 3.11 வரையிலான கூடுகளை விண்ணப்பத்தில் முதலாம் பக்கத்திலும் 4.0 தொடக்கம் 8.0 வரையிலான கூடுகளை அதன் மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப்படிவத்தை தயாரிக்க வேண்டு மென்பதை விசேடமாக கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவ உருவில் அமையாத விண்ணப்பங்களும் முழுமை பெறாதவாறு தகவல்களை குறிப்பிட்டுள்ள விண்ணப்பங் களும் அறிவிப்பு ஏதுமின்றி நிராகரிக்கப்படுமென்பதுடன் விண்ணப்பப்படிவத்தில் நிழற்பட பிரதியொன்றை தம் வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாகும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும் போது பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் அத்தியவசியமாகும்.

(ஆ) பரீட்சார்த்தி எம்மொழியில் பரீட்சைக்குத் தோற்ற விரும்புகிறாரோ அம்மொழியில் விண்ணப்பம் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப்பரீட்சைத் திணைக்களம் (ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை), பெலவத்தை,

பத்தரமுல்லை" என்று முகவரியிடப்பட்டு 2007.10.05 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2007" என்று தெளிவாக எழுதப்படல் வேண்டும். அத்திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஈ) விண்ணப்பப்பத்திரத்தில் உள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 2,37,060 க்கு மேற்பட்ட ஆண்டுச் சம்பளத்தையுடைய அரச சேவையில் நிரந்தரப்பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) எல்லா வகையிலும் நிறைவு பெற்றிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பம் அஞ்சலில் தொலைந்து விட்டமை அல்லது தாமதித்தமை பற்றிய முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

(ஊ) இலங்கை பரீட்சை திணைக்களம் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் ஆனுப்பிய உடன் அது தொடர்பாக பத்திரிகைகளில் அறிவிப்பொன்றை வெளியிடும். அறிவிப்பு வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் முடிவடைந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பின்வரும் விபரங்களை தம்வசம் வைத்துக் கொண்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுதல் பயனுள்ள தாகும்.

(i) விண்ணப்பப்படிவம், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றின் உறுதிப்படுத்திய நிழற்படப் பிரதிகள்.
(ii) விண்ணப்பம் பதிவுத்தபாலில் அனுப்பியதற்கான பற்றுச் சீட்டு
(iii) கொழும்புக்கு வெளியே என்றால் அனுமதி அட்டை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கம் குறிப்பிட்ட உங்கள் கடிதம்.

9. **பரீட்சைக்கு அனுமதி** .- (அ) விண்ணப்பங்கள் அனுப்பிய யாவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளருக்கு தனது அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தி தனக்குக் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். எல்லாப் பரீட்சார்த்திகளும் தாம் பரீட்சைக்குத் தோற்றும் மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையைப் பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே அம்மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சார்த்திகள் யாவரும் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளின் தொகுதியொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்தல் தொடர்பாக பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் சட்டத்திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச் சட்ட விதிகளை மீறும் பரீட்சார்த்திகள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாவதற்கு நேரிடும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப் பட்டமை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாக கொள்ள வியலாது.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**. - பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காகப் பின்வரும் சாதனங்களில் யாதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு

11. **பொய்யான தகவல்கள் வழங்குதலுக்கான தண்டனை**.- பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எக்கட்டத்திலும் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் அளித்த விபரங்களில் எவையேனும் அவரின் அறிவுக்கு எட்டிய அளவில் பொய்யானவை யெனக் காணப்படின் அல்லது அவர் ஏதேனும் ஒரு முக்கியமான விடயத்தை வேண்டுமென்று மறைந்திருந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

12. இவ்வொழுங்கு விதிகளால் ஏற்பாடு செய்யப்படாத எவையேனும் விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு அமைவாக செயலாளர் தீர்மானிக்கின்றபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **பரீட்சைத் திட்டம்**.- ***பரீட்சை மொழிமூலம்***.-

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி தகைமைப் பெற்ற பல்கலைக்கழகப் பட்டத்தை எம்மொழி மூலம் எழுதிச் சித்தியடைந்தாரோ அம்மொழி மூலம் அல்லது அரச கருமமொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(இ) பரீட்சார்த்தியொருவர் தகைமைபெற்ற பல்கலைக்கழக பட்டத்தில் பாடங்களை இரண்டு மொழிகளிலோ அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளின் மூலமாகவோ சித்தியடைந்திருப்பின், அந்தப் பல்கலைக்கழக பட்டத்தில் அவர் சித்தியடைந்த பாடங்களில் கூடிய தொகைக்கு விடையெழுதிய மொழி மூலமாகவோ அல்லது அரச கருமமொழியொன்றின் மூலமாகவோ பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(ஈ) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும் துணைப்பாடத்தை இன்னுமொரு மொழியிலும் எழுதிச் சித்தியடைந்திருக்கும் சிறப்புப்பட்டம் பெற்ற பரீட்சார்த்தியொருவர், அவர் பிரதான பாடத்திற்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கருமமொழியொன்றின் மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

**குறிப்பு**.- மேற்போந்த (ஆ), (இ) என்பவற்றில் பிரயோகிக்கப்பட்ட "தகைமைபெற்ற பல்கலைக்கழக பட்டம்" எனும் சொற்றொடர் 6 (ii) பந்தியில் குறிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டங்களின் தகைமையைக் குறிக்கும் :

(i) பரீட்சார்த்தி பரீட்சையில் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் மட்டும் விடை எழுத வேண்டும்.

(ii) பரீட்சார்த்தியொருவர் தனது விண்ணபபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

14. **தெரிவு செய்யும் முறை**.- பின்வரும் பாடங்களைக் கொண்ட ஒரு எழுத்துப்பரீட்சை :-

(i) பொது விவேகம் (1மணித்தியாலம்) - 100 புள்ளிகள் ;

(ii) கட்டுரையும் சுருக்கமும் (2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

(iii) பொது அறிவு (2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்.

(iv) முகாமைத்துவ உளச்சார்பு (2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

பரீட்சார்த்திகள் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

அமைவு முறையிலான வாய்மொழித் தேர்வு (25 புள்ளிகள்)

எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரர்களுள் தகைமை பெற்றவர் வாய்மொழித் தேர்வுக்காக அழைக்கப்படுவர். ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக் குறைந்த 40% வீத புள்ளிகளைப் பெற்றவர்களும் அரசாங்க சேவை ஆணைக்குழு வினால் போதுமானதென விதித்துரைக்கப்படுகின்ற உயர் மட்ட மொத்தப் புள்ளிகளை பெற்றவர்களுமான பரீட்சார்த்திகள் மட்டும் அமைவு முறையிலான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். மேற்கூறப்பட்ட தகைமைகளை பெறுகின்ற பரீட்சார்த்திகள் போதிய அளவு இருப்பார்களாயின் வெற்றிட எண்ணிக்கையைப் போல் இரு மடங்கான பரீட்சார்த்திகள் வாய்மொழித் தேர்வுக்காக அழைக்கப்படுவர். பரீட்சார்த்திகள் எழுத்துப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளி எண்ணிக்கை வாய்மொழித் தேர்வுக் குழுவுக்கு வழங்கப்பட மாட்டாது (புள்ளி வழங்கும் முறை நியமன அதிகாரி/அரசாங்க சேவை ஆணைக்குழுவால் ஆட்சேர்ப்பின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படும்.) ஆட்சேர்ப்புக்கான தகைமைகளுக்கு மேலதிகமாக, ஒரே தரத்தில் அல்லது மேலதிகமாக கல்வித்தகைமைகள், தொழில்சார் தகைமைகள் மற்றும் தொழில் நுட்பத் தகைமைகள் அத்துடன் மொழித்திறன்கள் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் பொருத்தமானவாறு) நிரூபிப்பதன் மூலம் சான்றிதழ்கள் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு புள்ளிகள் நேர்முகப் பரீட்சையில் வழங்கப்படும்.

15. எழுத்துப் பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றிய விண்ணப்பதாரிகளில் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளை திறமை ஒழுங்கின்படி நியமனம் செய்வதற்கு தெரிவு செய்யப்படும். (நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுதலானது நியமனம் வழங்குவதற்கான தகைமையாக கருதுதல் ஆகாது)

16. ஒரு தடவையில் நியமனம் செய்யப்படும் எண்ணிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

17. **பாடத்திட்டம் :**

(i) *பொது விவேகம் (1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள் :* சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் பிரச்சினைகள் தொடர்பிலான பரீட்சார்த்தியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் சோதிப்பதன் மூலம் அவற்றை கிரகிப்பதில் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்திக் கூர்மையையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பாக்கப்படும்.

(ii) *கட்டுரையும் சுருக்கியெழுதுதலும் (2 மணித்தியாலங்கள்)- 100 புள்ளிகள் :* தரப்பட்ட தலையங்கங்கள் /தொனிப் பொருட்கள் பலவற்றிலிருந்து பரீட்சார்த்தி தானாகவே தெரிவு செய்து கொள்ளும் தலையங்கங்கள்/தொனிப் பொருள்கள் ஊடாக கருத்துக்களையும் தகவல்களையும் சமர்ப்பித்தல் ஒன்று திரட்டல் மற்றும் பரப்புதல் என்பவற்றில் பரீட்சார்த்திக்கு உள்ள தர்க்க ரீதியான சிந்தனை சக்தியை அளவிடுதலும் ஓரளவு சிக்கலான பந்தியொன்றை எழுத்தாவணம் ஒன்றை அல்லது நிருப மொன்றை ஊகித்துணர்ந்து அதன் முக்கிய கருத்துக்களை தனது சொல்லில் சுருக்கி சரியாகவும் தெளிவாகவும் கருத்துக்களை தெரிவிப்பதில் அவருக்கு உள்ள ஆற்றலை அளவிடுதலும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

(iii) *பொது அறிவு* (2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள் *:* தேசிய ரீதியிலும், வலய ரீதியலும் உலகில் பல அமைப்புச் சுற்றாடல்களினுள் போன்று எமது சமூகத்தில் நிலவுகின்ற சமூக, கலாசார, கல்வி, விஞ்ஞான, அரசியல் பொருளாதார மற்றும் ஏனைய காரணிகள் தொடர்பில் பரீட்சார்த்தி அடைந்துள்ள அறிவையும் புரிந்துணர்வையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

(iv) *முகாமைத்துவ உளச்சார்பு* (2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள் : பிரச்சினைகளையும் அவற்றிற்கான காரணங்களையும் இனம் காணுதல், தீர்மானமெடுத்தல், நபர்களுக்கிடையிலான தொடர்புகளை நடாத்திச் செல்லுதல், தொடர்புத் துறைகளிலான திறமை, சுய ஒழுக்கம் கொள்கை மற்றும் உபாய வழிமுறைகளை தயாரித்தல் ஆகிய வகையில் பரீட்சார்த்தி ஒருவரிடம் உள்ள சிறந்த முகாமைத்துவ திறமைகளை அவரிடம் முன்வைக்கப்படும் சம்பவங்கள் மற்றும் சந்தர்ப்பங்களை ஆதாரமாகக் கொண்டு நிர்ணயிப்பது இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

டி. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2007, ஓகத்து 16.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை நிருவாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2007**

## Open Competitive Examination for Recruitment to the Sri Lanka Administrative Service Grade III - 2007

1. மொழிமூலம் :-
பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :-
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய ஆங்கில எழுத்தை கூட்டினுள் எழுதவும்).

2. நகரம் :-
பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரம்

நகர இலக்கம்

(பரீட்சை அறிவித்தலின் பந்தி இலக்கம் 01 இன் படி) நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.)

3. தனிப்பட்ட தகவல்கள் :-

3.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடனான பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

உதாரணம்- SILVA. A.B.

3.2 முழுப்பெயர் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

3.3 முழுப்பெயர் :----.
(சிங்களத்தில்/ தமிழில்)

3.4 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) (அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அஞ்சலிடப்படும்) : ----.

3.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3.6 பால் : (ஆண் - 0, பெண் - 1) :-
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.7 திருமணமானவரா/திருமணமாகாதவரா :-
(திருமண மாகாதவர் - 0 திருமணமானவர் - 1)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.8 இனத் தொகுதி :- சிங்களம் - 1, தமிழ் - 2, இந்தியத் தமிழ் - 3, முஸ்லிம் - 4, வேறு - 5)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.9 தேசிய அடையாள அட்டை இல. :-

3.10 பிறந்த திகதி:-

ஆண்டு : மாதம் : திகதி :

3.11 விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் வயது:-

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

4. இலங்கை நிருவாக சேவைக்கு நியமனம் செய்வதற்காக இதற்கு முன் நடாத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டுகளைக் குறிப்பிடவும் :

(அ) ----.

(ஆ) ----.

(இ) ----.

5. (i) பல்கலைக்கழக பட்டம் பெற்ற திகதி :----.
(இத்தகைமைகள் உள்ளனவா என்பதைப் பார்ப்பதற்காகத் தயவு செய்து அறிவித்தலின் 6 (ii) ஐ நன்றாக வாசிக்கவும்.)
(ii) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.
(iii) பதிவு செய்த இலக்கம் :----.
(iv) வெளிவாரி/ உள்வாரி :----.
(v) பட்டம் :----.
(vi) பாடங்கள் :----.
(vii) வகுப்பு :----.
(viii) மேல்பிரிவு/ கீழ்பிரிவு :----.
(ix) சுட்டெண் :----.
(x) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் :----.

6. பணம் செலுத்திய பற்றுச் சீட்டை நன்கு இதில் ஒட்டிவிடவும் :-

(பற்றுச் சீட்டை கழறாதவாறு ஒட்டிவிடவும்)
(புகைப்பட பிரதியொன்றை தம் வசம் வைத்துக்கொள்ளவும்)

7. **பரீட்சார்த்தியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ---- ஆம் இலக்க ---- ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் உறுதியுரைக்கின்றேன். மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டத்திட்டங்களுக்கு அமைந்தொழுகி நடப்பேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன். இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்தி தன்மையை இரத்துச்செய்வதற்கும் எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வதற்கும் இணக்கத்தைத் தெரிவிக்கின்றேன்.

------------.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8. **விண்ணபப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :** (வர்த்தமானி அறிவித்தலின் 8 (ஈ) இன் பிரகாரம் இருத்தல் வேண்டும்).

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ---- (முழுப்பெயர்) என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும் ---- ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின்-
முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(அலுவலக முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

9-01

---

## கல்வி அமைச்சு

### அரசாங்க, அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களை இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதித்தல்-2007/2008 கல்வி ஆண்டு

2007/ 2008 ஆம் கல்வியாண்டில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளைத் தொடர்வதற்கு இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்காக பொது ஆங்கிலம்/கலை (ஆங்கிலப் பாடத்துடன் கலை) தகைமை (வெளிவாரி)ப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள அரச மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட கலைப்பட்டப் பாடநெறி.

(ii) விஞ்ஞானப்பட்டப் பாடநெறி.

2. விண்ணப்பதாரிகள் இதற்காகப் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :-

(i) 2002 ஆம் வருடத்தில் அல்லது அதன் பின்பு நடாத்தப்பட்ட பொது விஞ்ஞான/கலை (ஆங்கிலப் பாடத்துடன்) தகைமை வெளிவாரி பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். (பரீட்சைப் பெறுபேற்று பிரதியொன்று விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.)

(ii) விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளன்று ஆசிரியராக 5 வருட சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

(iii) ஆசிரிய கல்லூரி, கல்விக் கல்லூரி, பல்கலைக்கழகம் என்பவற்றிலோ தேசிய கல்வி நிறுவனத்தின் பாடநெறிகளைத் தொடர்வதற்காக பதிவு செய்யாதவராக இருக்க வேண்டும்.

(iv) இவ்விசேட அனுமதியின் கீழ் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் படுவது பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) அல்லது பொது விஞ்ஞானத் தகைமை (வெளிவாரி) பரீட்சையில் பெற்ற மொத்த புள்ளிகள் மற்றும் உரிய பாடங்களுக்கு பெற்ற புள்ளிகளின் அடிப்படையிலாகும். இதற்கு மேலதிகமாக உரிய பல்கலைக்கழகத்தினால் தீர்மானிக்கக்கூடிய வகையில் விஞ்ஞானப் பட்டப் பாடநெறியை தொடர்வதற்காக தகைமைபெறும் விண்ணப்பதாரர்கள் அப்பல் கலைக்கழகத்தினால் வாய்மூலப்பரீட்சைக்கு உட்பட வேண்டியதுடன் கலைப்பட்டப் பாடநெறியை தொடர் வதற்கான தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு சபையின் மூலம் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) இப்பாடநெறியை தொடர்வதற்கு தெரிவு செய்யப்படுவார் களாயின் அவர்களுக்கு கற்கை விடுமுறை வழங்கப்பட வேண்டியபடியால் கற்கை விடுமுறை உரிமை கொண்ட வர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும்.

3. சம்பளத்துடனான விடுமுறை பெற்றுக்கொள்வதற்குள்ள உரிமைகள் பற்றி நேர்முகப் பரீட்சையின் போது வினவப்படும்.

4. பட்டம் பெற்றுக்கொண்ட பின்பு பட்டதாரி ஆசிரிய நியமனம் வழங்குவதற்கு இவ்வமைச்சு கட்டுப்படமாட்டாது.

5. அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலை களில் சேவை செய்யும் ஆசிரியர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களில் அப்பாடசாலையின் அதிபர்/முகாமையாளர் என்பவரால் உரிய ஆசிரியருக்காக கற்கை விடுமுறை அனுமதிக்க முடியும்/முடியாது என்பதை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

6. சகல விண்ணப்பப்பத்திரங்களும் இங்கு கீழே குறிப்பிடப் படுகின்ற மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்பத் தயாரித்து இரண்டு பிரதிகளாக கீழ்க் குறிப்பிடப்பட்ட விலாசத்திற்கு 2007.09.22 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

7. விண்ணப்பப்படிவம் இடப்பட்டு அனுப்பப்படும் தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் "2007/2008 இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடப்பட வேண்டும். அரசாங்க ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளரினாலும் அரசாங்க அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் உரிய அதிபர்/ முகாமையாளர் என்பவர்களாலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஆரியரத்ன ஹேவகே,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

மனிதவள அபிவிருத்திக் கிளை,
கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

..................................................பாடநெறியை தொடர்வதற்காக பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கோரல் - 2007/2008

1. (i) முழுப்பெயர் :----.
(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. பால் (ஆண்/பெண்) :----.

3. பதவி (வகுப்பு தரம் மற்றும் சேவை) :----.

4. சொந்த முகவரி :----.

5. அலுவலக முகவரி :----.

6. சேவையில் ஈடுபட்டுள்ள பாடசாலை, வலயம் மாகாணம் மற்றும் மாவட்டம் :-
(i) பாடசாலை :----. (iii) மாகாணம் :----.
(ii) வலயம் :----. (iv) மாவட்டம் :----.

7. (i) முதல் நியமனத் திகதி :----.

(ii) நிரந்தர நியமனம் பெற்ற திகதி :----.

8. ஆசிரியராக பதிவு செய்யப்பட்டுள்ள எண் :----.

9. (i) பிறப்பு திகதி :-
ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

(ii) 2007.09.22 ஆந் திகதியன்று வயது :-
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

10. தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைந்த வருடமும் பாடங்களும் பெறுபேற்றுப் பிரதியொன்றை இணைக்கவும்) :-

(i) வருடம் :----.

(ii) பாடங்கள்-
(1) ----.
(2) ----.
(3) ----.

11. தொடர்வதற்குரிய கல்விப் பாடநெறியின் பெயரும் பாடங்களும் :----.

(i) பெயர் :----.

(ii) பாடங்கள்-
(1) :----.
(2) :----.
(3) :----.

12. அனுமதிபெற விரும்பும் பல்கலைக்கழகத்தின் பெயர் :----.

13. தற்போது ஆசிரிய கல்லுரியொன்றில், கல்விக் கல்லூரியொன்றில், பல்கலைக்கழகமொன்றில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் வேறு பாடநெறியொன்றிற்கு பதிவு செய்யப்பட்டுள்ளீரா ? :----.

அவ்வாறாயின் அதன் விபரங்கள் :----.

மேற்படி விவரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதியுரைக்கிறேன்.

......................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

மேற்கூறப்பட்ட பெயர் கொண்ட ஆசிரியர் .............................. ஆந் திகதி தொடக்கம்.............................. பாடசாலையில் சேவையாற்றுகின்றாரென்றும் அவர் இப்பாடசாலையிலிருந்து இறுதியாகச் சம்பளம் பெற்றுள்ளாரென்றும் மேற்படி பாடநெறியைத் தொடர அனுமதிக்கப்படலாமென்பதையும் உறுதிப்படுத்துகின்றேன். விண்ணப்பதாரிக்குத் தேவைப்படும் சம்பளத்துடனான கற்கை விடுமுறை பெற்றுக்கொள்வதற்காகச் சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை.

(கற்கை விடுமுறை சிபாரிசு செய்யப்படாவிடின் காரணம் காட்டவும்).

----.
அதிபர்/முகாமையாளரின் கையொப்பமும் உத்தியோக முத்திரையும்.

முகவரி :----.
திகதி :----.

சிபாரிசு செய்கிறேன் /செய்யவில்லை
முகவரி :----.
திகதி :----.

----.
வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை.
முகவரி :----.
திகதி :----.

----.
மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பமும் உத்தியோக முத்திரையும்.

9-202

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்ருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை-2007**

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 07.09.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.08.2007 |
| | | வெள்ளி | 14.09.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.08.2007 |
| | | வெள்ளி | 21.09.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.09.2007 |
| | | வெள்ளி | 28.09.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.09.2007 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 05.10.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.09.2007 |
| | | வெள்ளி | 12.10.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.09.2007 |
| | | வெள்ளி | 19.10.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.10.2007 |
| | | வெள்ளி | 26.10.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.10.2007 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 02.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.10.2007 |
| | | வெள்ளி | 09.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.10.2007 |
| | | வெள்ளி | 16.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.11.2007 |
| | | வெள்ளி | 23.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.11.2007 |
| | | வெள்ளி | 30.11.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.11.2007 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2007, சனவரி 01.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.